**சிறுதொழில் பெருந்தோட்ட தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2019**

---

சிறுதொழில் பெருந்தோட்ட தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் - கிராமிய நிதி மற்றும் கடன் கூறு (''நிகழ்ச்சித்திட்டம்'') 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்றுக்கள், காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள், நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2007 மே 08 ஆம் திகதி 712-எல்.கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் நிகழ்ச்சித்திட்டத்தின் காலப்பகுதி

---

சிறுதொழில் பெருந்தோட்ட தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் கிராமிய நிதியிடல் மற்றும் கடன் கூறிற்கான அதிகாரமளிக்கப்பட்ட நிறைவேற்றல் முகவராக இலங்கை மத்திய வங்கி உள்ளது. பயனாளிகளின் நிறுவனரீதியான இயலளவு மற்றும் பேரம்பேசுதல் திறன்களை வலுப்படுத்துதல், சிறுதொழில் தேயிலை மற்றும் இறப்பர் செய்கையாளர்களின் காணிக் குத்தகை நிலைமைகளை மேம்படுத்துதல், முன்னேற்றகரமான அறுவடைக்குப் பின்னரான கையாளுகை ஊடாக உற்பத்தியாளர்களின் இலாபத்தினை அதிகரித்தல், அவர்களின் உற்பத்திப் பொருட்களினை களஞ்சியப்படுத்துதல், செயன்முறைப்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதல், கிராமிய நிதி மற்றும் கடன் சேவைகளை அபிவிருத்தி செய்து விரிவுபடுத்துதல் மற்றும் பெண்கள் தங்களின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துதல் மற்றும் வறுமை காலத்தினை குறைத்தல் ஆகியவற்றை உறுதிப்படுத்துதல் என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோள்களாகும். செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 12 செலவு வகைகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அவையாவன: சிவில் வேலைகள், வாகனங்கள், உபகரணம் மற்றும் பொருட்கள், பயிற்சி மற்றும் பட்டறைகள், தொழில்நுட்ப உதவி மற்றும் கல்வி, சேவை வழங்குனர், ஒப்பந்தம், விவசாய உள்ளீடுகள், மானியங்கள் மற்றும் தொடர்புடைய உதவிகள், கடன், சம்பளங்கள் மற்றும் உதவிப்பணங்கள், செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு மற்றும் ஒதுக்கப்படாதது.

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நிகழ்ச்சிதிட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா. 2,574 மில்லியனுக்கு சமமான எஸ்.டி.ஆர் 15.25 மில்லியன் (அ.டொலர். 23 மில்லியன்) ஆகும். அதில் அண்ணளவாக ரூபா. 295 மில்லியனுக்கு சமமான எஸ்.டி.ஆர் 1.75 மில்லியன் (அ.டொலர். 2.7 மில்லியன்) நிகழ்ச்சித்திட்டத்தின் கிராமிய நிதியிடல் மற்றும் கடன் கூறு ஆகியவற்றில் ஒதுக்கப்பட்டுள்ளது. 2014 செப்ரெம்பரில் நிகழ்ச்சித்திட்டத்தின் கிராமிய நிதியிடல் மற்றும் கடன் கூறு ஆகியவற்றிற்கான ஒதுக்கீடு ரூபா. 494 மில்லியனுக்கு சமமான எஸ்.டி.ஆர் 2.6 மில்லியன் (அ.டொலர். 3.8 மில்லியன்) ஆக திருத்தப்பட்டிருந்தது. 2009 யூலை 14 இல் மானிய கடன் ஒப்பந்தம் இலங்கை அரசாங்கத்திற்கும் இலங்கை மத்திய வங்கியின் நாணய சபைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டிருந்தது. மற்றும் 2015 மே 29 இல் இது திருத்தப்பட்டது. நிகழ்ச்சித்திட்டமானது 2010 இல் அதன் நடவடிக்கைகளை தொடங்கியிருந்தது மற்றும் 2016 இல் பூர்த்தியாக்கியிருந்தது.

### 1.3 அபிப்பிராயம்

---

நிகழ்ச்சித்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றலினையும் மற்றும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

---

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வு காலப்பகுதியில் என்னால் அடையாளம் காணப்படுகின்ற ஏனைய விடயங்களில், உள்ளக கட்டுப்பாட்டின் ஏதாவது குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உட்பட குறிப்பிடத்தக்க கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், தொடர்பாக அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களுடன் நான் தொடர்பு கொண்டேன்.

## 2. நிதி மற்றும் உண்மையான செயல்திறன்

### 2.1 நிதிகளின் பயன்பாடு

31 டிசம்பர் 2019 நிலவரப்படி நிதி மற்றும் நிதி பயன்பாடு தொடர்பான சில குறிப்பிடத்தக்க புள்ளி விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் ஒப்பந்தத்தின் படி கிராமப்புற நிதியுதவிக்கு ஒப்புக்கொள்ளப்பட்ட தொகை | | பயன்படுத்தப்பட்ட நிதி | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் | | 2019 டிசெம்பர் 31 இல் | |
| | SDR மில்லியன் | ரூபா மில்லியன் | SDR மில்லியன் | ரூபா மில்லியன் | SDR மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐ.எப்.ஏ.டி (IFAD) | 2.6 | 494 | - | - | 2.48 | 488 |

### 2.2 செயற்பாடுகள் மற்றும் கடன் மீட்டெடுப்பு திட்டத்தின் உண்மையான முன்னேற்றம்

ரூபா 487.66 மில்லியன் பெறுமதியான 4,060 மறு நிதியளிப்பு கடன்களை கிராமிய நிதி மற்றும் கடன் கூறுகளின் கீழ் 2016 டிசெம்பர் 31 இல் இத் திட்டமானது மொனராகல, கேகாலை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் பயனாளிகளுக்குதவும் 7 நிதி நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்டதுடன் 2016 ஆம் ஆண்டிற்குப்பிறகு மறு நிதியளிப்பு கடன் வழங்கப்படவில்லை. திட்டத்தின் நடவடிக்கைகள் 2016 டிசெம்பர் 31 அன்று மூடப்பட்டன. இருப்பினும் மீட்டெடுக்கும் செயல்முறை 2019 டிசெம்பர் 31 வரை தொடர்ந்தது. மறு நிதியளிப்பு கடன்களின் மூலதன மீட்டெடுப்புக்கள் ரூபா 445 மில்லியன் 2018 இலும் ரூபா 30 மில்லியன் 2019 இலும் மத்திய வங்கியில் நிறுவப்பட்ட சுழல் நிதிக் கணக்கிற்கு மாற்றப்பட்டது. இந்த திட்டம் உள்ளிட்ட மூன்று ஐ.எப்.ஏ.டி நிதியளிக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் இத் திட்டம் உட்பட் ரூபா.3.216 மில்லியன் மேலும் மறு நிதியளிப்பு கடன்களாக வழங்கப்பட்டு 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் மீட்கப்பட வேண்டும்.